ஞாயிறுதோறும் தினமணியுடன்...
தினமணி கொண்டாட்டம்

தினமணி
செவ்வாய்க்கிழமை, 27 அக்டோபர் 2026

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

கொடைக்கானல் மலைச் சாலையில் மண் சரிவு

போக்குவரத்து பாதிப்பு




கொடைக்கானல்-பழனி மலைச் சாலையில் பி.எல். செட் பகுதியில் ஏற்பட்ட மண் சரிவு. (வலது) கொடைக்கானல்-வத்தலகுண்டு சாலையில் நண்டாங்கரை அருகே விழுந்த பாறையை பொக்லைன் இயந்திரம் மூலம் அகற்றும் பணியில் ஈடுபட்ட ஊழியர்கள்.

கொடைக்கானல், அக். 26: திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு பெய்த பலத்த மழையால் மலைச் சாலையில் பல இடங்களில் மண் சரிந்து பாறைகள் உருண்டு கீழே விழுந்ததால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பலத்த மழையால் கொடைக்கானல்-வத்தலகுண்டு மலைச்சாலையான உகார்த்தே நகர், டம்டம் பாறை, நண்டாங்கரை, வாழைகிரி, மச்சூர் உள்ளிட்ட பகுதிகளில் மண் சரிந்து பாறைகள் உருண்டு கீழே விழுந்தன. இதேபோல, கொடைக்கானல்-பழனி மலைச் சாலையான ஆணைகிரி சோலை, பி.எல். செட், சவரிக்காடு உள்ளிட்ட இடங்களில் மண் சரிவு ஏற்பட்டு, சிறு சிறு பாறைகள் மலைச் சாலையில் விழுந்தன. இதனால், அந்தப் பகுதிகளில் சுமார் 30 நிமிஷங்கள் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து, இந்தப் பகுதிகளில் பொக்லைன் இயந்திரம் மூலமாக பாறைகளை அகற்றும் பணி நடைபெற்றது. இதன் பின்னர், போக்குவரத்து சீரானது.

கொடைக்கானல் அப்சர்வேட்டரி குடியிருப்புப் பகுதியில் மரம் முறிந்து விழுந்தது. இந்த மரத்தை அந்தப் பகுதி பொதுமக்களின் உதவியுடன் மின் வாரியத்தைச் சேர்ந்த பணியாளர்கள் அகற்றினர்.

இதேபோல, கொடைக்கானல் மேல்மலைக் கிராமமான பூம்பாறை, மன்னவனூர், கூக்கால், குண்டுபட்டி, பழம்புத்தூர், புதுப்புத்தூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக, மன்னவனூர்-பூண்டி செல்லும் சாலையில் மரம் முறிந்து விழுந்தது. தகவலறிந்து வந்த வனத் துறையினர் அந்த மரத்தை அப்புறப்படுத்தினர்.

வீட்டின் சுவர் இடிந்து சேதம்: மழை காரணமாக, பூம்பாறையில் கோவில் தெருவைச் சேர்ந்த அழகுமலை, சக்திவேல் ஆகியோரது வீட்டின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக வீட்டில் உள்ளவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. மேலும், பூம்பாறை-கிளாவரை சாலையில் மகாலட்சுமி கோயில் அருகே மண் சரிவு ஏற்பட்டு பாறை உருண்டு விழுந்ததால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவலறிந்து வந்த ஊராட்சி நிர்வாகத்தினர் பொக்லைன் இயந்திரம் மூலம் பாறைகளை அகற்றினர்.



கொடைக்கானல் சின்னூர் கல்லாற்றில் திடீர் வெள்ளம் ஏற்பட்டதையடுத்து, கயிறு கட்டி ஆற்றைக் கடந்து சென்ற அந்தப் பகுதி மக்கள்.

போலீஸார் ரோந்து: திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் உத்தரவின் பேரில், பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் மலைச் சாலைகளில் பாதுகாப்பாக பயணிக்க வேண்டும் என்றும், ஆபத்தான இடங்களுக்கும், நீரோடைப் பகுதிகளுக்கும் செல்லக் கூடாது என்றும் கொடைக்கானல் போலீஸார் அறிவுறுத்தி வருகின்றனர். மேலும், காவல் துறையினர் தீவிர ரோந்துப் பணியிலும் ஈடுபட்டனர்.

கொடைக்கானல் நகராட்சி சார்பில், 50-க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் ஏரிச் சாலை முதல் வெள்ளி நீர் அருவி வரை பிரதான சாலையில் சிதறிக் கிடந்த கற்கள், குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். மேலும், வாய்க்கால்களில் ஏற்பட்ட சிறு, சிறு அடைப்புகளை அகற்றும் பணியிலும் ஈடுபட்டனர்.

சின்னூர் கல்லாற்றில் திடீர் வெள்ளம்: பலத்த மழை காரணமாக, கொடைக்கானல் சின்னூர் கல்லாற்றில் திங்கள்கிழமை திடீர் வெள்ளம் ஏற்பட்டது. கொடைக்கானல் கீழ்மலைப் பகுதியில் வெள்ளகெவி ஊராட்சிக்கு உள்பட்ட சின்னூர், பெரியூர் உள்ளிட்ட பகுதிகள் உள்ளன. இந்தக் கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள், விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பொருள்களை கல்லாற்றைக் கடந்து பெரியகுளம் சென்று வாங்கி வருவது வழக்கம். இந்தப் பொருள்களை தாங்கள் வளர்க்கும் குதிரைகள், கழுதைகள் மூலம் எடுத்து வருவர்.

இந்த நிலையில், சின்னூர், பெரியூர் கிராம மக்கள், விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிவிட்டு மீண்டும் தங்களது ஊருக்கு திங்கள்கிழமை திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது, தொடர் மழை காரணமாக, கல்லாற்றில் திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால், ஆற்றைக் கடக்க முடியாமல் தவித்தனர்.

இதையடுத்து, அந்தப் பகுதி இளைஞர்கள் இவர்களை கயிறு கட்டி ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு அழைத்து வந்தனர். இதேபோல, இவர்கள் தங்களது கால்நடைகளையும் கயிறு கட்டி இழுத்துச் சென்றனர்.

அருணாசலேஸ்வரர் கோயிலில் அன்னாபிஷேகம்



திருவண்ணாமலை ஸ்ரீஅருணாசலேஸ்வரர் கோயிலில் அன்னாபிஷேக அலங்காரத்தில் அருள்பாலித்த ஸ்ரீகல்யாணசுந்தரேஸ்வரர்.

ஆரணி, அக்.26: திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலில் திங்கள்கிழமை அன்னாபிஷேக அலங்காரத்தில் அருள்பாலித்த மூலவர் ஸ்ரீ அருணாசலேஸ்வரரை திரளான பக்தர்கள் தரிசித்தனர்.

சிவாலயங்களில் நடைபெறும் அன்னாபிஷேகம் சிறப்புமிக்கது. சுவாமிக்கு அன்னத்தால் அபிஷேகம் செய்து வழிபட்டால், அனைத்து ஜீவராசிகளுக்கும் உணவு கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும்.

அனைத்து சிவன் கோயில்களிலும் ஐப்பசி மாதம் மூலவருக்கு அன்னாபிஷேகம் செய்து, காய்கனிகளை கொண்டு அலங்கரித்து சிறப்பு வழிபாடு நடைபெறும். பின்னர், பக்தர்களுக்கு பிரசாதமாக அன்னம் வழங்கப்படும்.

அதன்படி, அருணாசலேஸ்வரர் கோயிலில் திங்கள்கிழமை மாலை அசுவினி நட்சத்திரத்தில் மூலவருக்கு அன்னாபிஷேகம் நடைபெற்றது. இதையொட்டி, பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய தடை விதிக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து, மாலை 6 மணிக்கு பிறகு பக்தர்கள் சுவாமி தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டனர். இதில், நீண்ட வரிசையில் காத்திருந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் அன்னாபிஷேகத்தில் அருள்பாலித்த ஸ்ரீ அண்ணாமலையார் மற்றும் சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்த உண்ணாமுலையம்மனை தரிசித்தனர். மேலும், கோயில் சுற்றுப் பிரகாரங்களில் உள்ள கல்யாணசுந்தரேஸ்வரர் உள்ளிட்ட சுவாமிகளுக்கும் அன்னாபிஷேகம் செய்யப்பட்டிருந்தது.

இதேபோல, திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள ஆதி அருணாசலேஸ்வரர் கோயில், திருநேர் அண்ணாமலையார் கோயில்களிலும் அன்னாபிஷேகம் நடைபெற்றது.

தங்கம் பவுனுக்கு ரூ.120 உயர்வு

சென்னை, அக்.26: சென்னையில் தங்கம் விலை திங்கள்கிழமை பவுனுக்கு ரூ.120 உயர்ந்து, ரூ.1,04,680-க்கு விற்பனையானது.

தங்கம் விலை கடந்த சில நாள்களாக குறைந்து வந்த நிலையில் வார கடைசி நாளான சனிக்கிழமை (அக்.24) பவுனுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.1,04,560-க்கு விற்பனையானது.

இந்நிலையில், வாரத் தொடக்க நாளான திங்கள்கிழமை தங்கம் விலை கிராமுக்கு ரூ.15 உயர்ந்து, ரூ.13,085-க்கும், பவுனுக்கு ரூ.120 உயர்ந்து, ரூ.1,04,680-க்கும் விற்பனையானது.

வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.220-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.2.20 லட்சத்துக்கு விற்பனையானது.

டிச. 20-இல் சிறப்பு டெட் தேர்வு: ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு

சென்னை, அக். 26: பணியில் உள்ள ஆசிரியர்களுக்கான சிறப்பு டெட் தேர்வு டிச. 20-ஆம் தேதி நடைபெறும். இத்தேர்வுக்கு செவ்வாய்க்கிழமை முதல் விண்ணப்பிக்கலாம் என ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் சுயநிதி பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான சிறப்பு டெட் தேர்வு கடந்த ஜூலை 4,5-ஆம் தேதிகளில் நடத்தப்பட்டு, அதன் முடிவுகள் கடந்த 12-ஆம் தேதி வெளியிடப்பட்டன. தேர்வெழுதிய 2.17 லட்சம் ஆசிரியர்களில் 1.10 லட்சம் பேர் தோல்வியடைந்தனர். தோல்வி அடைந்த ஆசிரியர்களுக்காக சிறப்பு டெட் தேர்வு டிசம்பரில் நடைபெறவுள்ளது.

இது குறித்து ஆசிரியர் தேர்வு வாரியம் திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

பணியில் உள்ள ஆசிரியர்களுக்கான டெட் தேர்வு டிச. 20-ஆம் தேதி நடத்தப்படும். அன்றைய தினம் காலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான தாள்-2 தேர்வும், பிற்பகலில் இடைநிலை ஆசிரியர்களுக்கான தாள்-1 தேர்வும் நடைபெறும். இத்தேர்வுக்கு செவ்வாய்க்கிழமை (அக். 27) முதல் நவம்பர் 19-ஆம் தேதி வரை ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் (www.trb.tn.gov.in) விண்ணப்பிக்கலாம்.

ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் சிறப்பு டெட் தேர்வை தற்போது பணியில் இருக்கும் ஆசிரியர்கள் மட்டுமே எழுத முடியும். பணியில் இல்லாத பிஎட் பட்டதாரிகள், இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள் எழுத முடியாது. அவர்கள் பொது டெட் தேர்வை மட்டுமே எழுத முடியும். பொது டெட் தேர்வு கடந்த 2025-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நிலையில் பிஎட், இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்து பொது டெட் தேர்வை எதிர்பார்த்து ஏறத்தாழ 3 லட்சம் பேர் காத்திருக்கின்றனர்.

டெட் தேர்வு ஆண்டுக்கு இரு முறை கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும் என்பது தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் (என்சிடிஇ) விதிமுறை. இந்த ஆண்டு ஜூலை, டிசம்பர் மாதத்தில் டெட் தேர்வுகள் நடத்தப்படும் என ஆசிரியர் தேர்வு வாரியம் ஏற்கெனவே அறிவித்திருந்தது.


ஆனால், அதன்படி ஜூலையில் டெட் தேர்வு நடத்தப்படவில்லை. டிசம்பரில் நடத்துவதற்கும் இது வரை அறிவிப்பு வெளியிடப்படவில்லை. இது குறித்து ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அதிகாரிகளிடம் கேட்டபோது, பொது டெட் தேர்வு விரைவில் நடத்தப்படும். அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன எனத் தெரிவித்தனர்.

இதற்கிடையே, டெட் தாள்-1, தாள்- 2 ஆகிய இரு தேர்வுகளும் ஒரே நாளில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது, இரு தேர்வுகளையும் எழுதும் ஆசிரியர்களுக்கு ஏற்புடையதாக இல்லை.

எனவே தேர்வுத் தேதிகளை மாற்றி அமைக்க வேண்டும் என தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில அமைப்பின் பொதுச் செயலர் நா.சண்முகநாதன் வலியுறுத்தியுள்ளார்.

மேட்டுப்பாளையம்-உதகை இடையே அக்.29 வரை மலை ரயில் சேவை ரத்து

மேட்டுப்பாளையம், அக்.26: மேட்டுப்பாளையம் - உதகை இடையே அக்.29-ஆம் தேதி வரை மலை ரயில் சேவை ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே சேலம் கோட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.



மேட்டுப்பாளையம்-குன்னூர் மலை ரயில் பாதையில் தண்டவாளத்தின் மீது விழுந்துள்ள மரம்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இருந்து தினமும் காலை 7.10 மணிக்கு நீலகிரி மாவட்டம், உதகைக்கு மலை ரயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், வடகிழக்குப் பருவமழை தொடங்கியது முதலே அடிக்கடி மண் சரிவு ஏற்பட்டு பாறைகள் உருண்டு தண்டவாளங்கள் மீது விழுந்து, அவ்வப்போது ரயில் சேவை தடைபட்டு வருகிறது. இதற்கிடையே கடந்த சனிக்கிழமை மேட்டுப்பாளையம் - குன்னூர் மலை ரயில் பாதையில் ஏற்பட்ட மண் சரிவால் மலை ரயில் சேவை ரத்து செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் ரயில் சேவை தொடரும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது மேலும் 3 நாள்களுக்கு ரயில் சேவை ரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தெற்கு ரயில்வே நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில், 'மழைப்பொழிவு காரணமாக மீண்டும், மீண்டும் மண் சரிவு ஏற்படுகிறது. எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வரும் 29-ஆம் தேதி வரை மேட்டுப்பாளையம் - உதகை இடையிலான மலை ரயில் போக்குவரத்து ரத்து செய்யப்படுகிறது' என்று குறிப்பிட்டுள்ளது.

கொடியேற்றம்...



திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்- காந்திமதியம்மன் திருக்கோயிலில் திங்கள்கிழமை ஐப்பசி திருக்கல்யாண திருவிழா கொடியேற்றத்துக்குப் பின் நடைபெற்ற மகா தீபாராதனை.

SBI பாரத ஸ்டேட் வங்கி
ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை- II
எண். 44, முதல் தளம், எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
மின்னஞ்சல் முகவரி: sbi.70674@sbi.co.in

அதிகாரபூர்வ அலுவலர் விவரங்கள்: பெயர்: திரு. கைலாஷ் சந்திர மீனா , போன் : 8699009584
தொடர்புக்கு: நகர வழக்கு அலுவலர் : பெயர்: திரு. R. நானி குமார் - மொபைல் : 9150414086

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு. (8(6) விதியை காண்க)

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அதிகாரப்பூர்வ அதிகாரி, பாரத ஸ்டேட் வங்கி, அவர்களால் **கீழ்குறிப்பிட்டுள்ள சுவாதீனத்தில்** எடுத்துக்கொள்ளப்பட்டது. **சென்னை பாரத ஸ்டேட் வங்கி, SARB-II கிளைக்கு** கீழே விவரிக்கப்பட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பாக்கித்தொகையினை வசூலிக்கும் பொருட்டும் சொத்தானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு"** மற்றும் **"உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"என்ன உள்ளதோ அப்படியே"** எனும் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யப்படவிருக்கிறது.

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: திரு. முருகன் கிருஷ்ணன், த/பெ. திரு. முருகன், குடியிருப்பு முகவரி 1: 1/511, கிழக்குத் தெரு, ரங்கசிங்கபுரம், திருப்பத்தூர், சிவகங்கை, பின்கோடு – 630211. **குடியிருப்பு முகவரி -2:** திரு. முருகன் கிருஷ்ணன், த/பெ. திரு. முருகன்,10, Marrilyne Avenue, Enfield, Middlesex, England – EN3 6EG. **அலுவலகத்தின் முகவரி:** திரு. முருகன் கிருஷ்ணன், த/பெ. திரு. முருகன், Business Manager, The Meeating point Ltd, 200-202, High Street Raod, East Ham, London, England - E62JA. **POA முகவரி:** Ms. கிரிஜா கிருஷ்ணன், Overdraft Tavern Ltd, 200-202, High Street Road, East Ham, London, England – E62JA.

நிலுவைத் தொகை: 26.10.2026 அன்றுள்ளபடி **ரூ.9,50,88,677.00 (ரூபாய் ஒன்பது கோடியே ஐம்பது இலட்சத்து எண்பத்து எட்டு ஆயிரத்து அறுநூற்று எழுபத்து ஏழு மட்டும்)** மேலும் எதிர்கால வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் உட்பட.

சொத்தின் விவரங்கள்

அசையாச் சொத்தின் விவரம்: சொத்து 1: அட்டவணை "A" சொத்து மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மயிலாப்பூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை மாவட்டம், சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, முன்னர் மயிலாப்பூர் திருவல்லிக்கேணி வட்டம், மயிலாப்பூர் வட்டம், மயிலாப்பூர் கிராமத்தின் பழைய சர்வே எண்.3198, மறுசர்வே எண் 1294, பிளாக் எண்.26 [TR/31/12-13 மற்றும் பட்டா C.A எண் 451/2012 இன்படி] சென்னை - 600 086, தற்போது கோபாலபுரம், தாமோதரன் தெரு, [ஆவணத்தின்படி பழைய கதவு எண்.8, புதிய கதவு எண்.6] [தற்போது] புதிய கதவு எண்.10 இல் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு 3,472சதுர அடி விஸ்தீரணங்கொண்ட சொத்து அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: மறுசர்வே எண்.1293, தெற்கில்: BIHAR ASSOCIATION கட்டிடம், கிழக்கில்: 20 அடி சாலை (தாமோதரன் தெரு), மேற்கில்: மறுசர்வே எண் 1297, நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம்: 26.2மீட்டர், கிழக்கு மேற்காக தென் புறம்: 26.5 மீட்டர், வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 12.5 மீட்டர், வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 11.9 மீட்டர், அனைத்தின் கூட்டுப்பரப்பளவு 3,472சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம். **அட்டவணை "B"** A அட்டவணை சொத்தில் விருப்பம், உரிமை மற்றும் பத்திரத்தின்படி பிரிக்கப்படாத [1,736சதுர அடி] அரை பங்கு. **அட்டவணை "C"** இங்கு மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை 'B' சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 876சதுர அடி நிலம் அதனுடன் அதில் கட்டப்படவுள்ள ஒரு கார் நிறுத்தம் உட்பட இரண்டாம் தளத்தில் 1621சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.'S1'. (03.04.2019 தேதியிட்ட கட்டுமான ஒப்பந்த ஆவண எண். 388/2019 & 03.04.2019 தேதியிட்ட விற்பனை ஆவண எண்.389/2019 இன் கீழ் அடங்கியது)

சுவாதீன நிலை: மெய்நிலை

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 3,10,00,000/- | டேவணித்தொகை 31,00,000/- | ஏல உயர்வுத்தொகை ₹ 1,00,000/-

சொத்து 2: அட்டவணை "A" சொத்து மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மயிலாப்பூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை மாவட்டம், சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, முன்னர் மயிலாப்பூர் திருவல்லிக்கேணி வட்டம், மயிலாப்பூர் வட்டம், மயிலாப்பூர் கிராமத்தின் பழைய சர்வே எண்.3198, மறுசர்வே எண் 1294, பிளாக் எண்.26 [TR/31/12-13 மற்றும் பட்டா C.A எண் 451/2012 இன்படி] சென்னை - 600 086, தற்போது கோபாலபுரம், தாமோதரன் தெரு,[ஆவணத்தின்படி பழைய கதவு எண்.8, புதிய கதவு எண்.6] [தற்போது] புதிய கதவு எண்.10 இல் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு 3,472சதுர அடி விஸ்தீரணங்கொண்ட சொத்து அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: மறுசர்வே எண்.1293, தெற்கில்: BIHAR ASSOCIATION கட்டிடம், கிழக்கில்: 20 அடி சாலை (தாமோதரன் தெரு), மேற்கில்: மறுசர்வே எண் 1297, நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம்: 26.2மீட்டர், கிழக்கு மேற்காக தென் புறம்: 26.5 மீட்டர், வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 12.5 மீட்டர், வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 11.9 மீட்டர், அனைத்தின் கூட்டுப்பரப்பளவு 3,472சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம். **அட்டவணை "B"** A அட்டவணை சொத்தில் விருப்பம், உரிமை மற்றும் பத்திரத்தின்படி பிரிக்கப்படாத [1,736சதுர அடி] அரை பங்கு. **அட்டவணை "C"** இங்கு மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை 'B' சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 860சதுர அடி நிலம் அதனுடன் அதில் கட்டப்படவுள்ள ஒரு கார் நிறுத்தம் உட்பட இரண்டாம் தளத்தில் 1588சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.'S2'. (03.04.2019 தேதியிட்ட கட்டுமான ஒப்பந்த ஆவண எண். 386/2019 & 03.04.2019 தேதியிட்ட விற்பனை ஆவண எண்.387/2019 இன் கீழ் அடங்கியது)

சுவாதீன நிலை: மெய்நிலை

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 3,04,00,000/- | டேவணித்தொகை 30,40,000/- | ஏல உயர்வுத்தொகை ₹ 1,00,000/-

(முன் அறிவிப்புடன்) சொத்துகளைப் பார்வையிடும் தேதி: **10.11.2026**, நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை.

மின் ஏலத் தேதி & நேரம்: **17.11.2026** | நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை | (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள்: 1.கடன்தாரர் **திரு. முருகன் கிருஷ்ணன் மற்றும் திரு. ஜேம்ஸ் டெல்சின்**, ஆகியோருக்கிடையே ஃபிளாட் S1-க்காக குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, மேற்படி குத்தகை ஒப்பந்தம் 04.09.2019 தேதியன்று பதிவு ஆவண எண். 1038/2019ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை ஒப்பந்தத்தின் காலக்கெடு 03.09.2022 அன்று முடிவடைந்தது. கடன்தாரர் **திரு. முருகன் கிருஷ்ணன்** மற்றும் Ms. **இஸ்ரத் ஃபாத்திமா**, ஆகியோருக்கிடையே ஃபிளாட் S2-க்காக குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, மேற்படி குத்தகை ஒப்பந்தம் 04.09.2019 தேதியன்று பதிவு ஆவண எண் 1037/2019 ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை ஒப்பந்தத்தின் காலக்கெடு 03.09.2022 அன்று முடிவடைந்தது. மேற்கண்ட இரண்டு பதிவுகளும் வில்லங்கச் சான்றிதழில் (EC) இடம்பெற்றிருந்தாலும், சம்பந்தப்பட்ட குத்தகை ஒப்பந்தங்களின் காலக்கெடு ஏற்கனவே முடிவடைந்துவிட்டது என்பதனை குறிப்பிடுவது அவசியமாகும்.
2. கடன்தாரரால் 21.09.2019 அன்று அசல் உரிமை ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் மேற்படி அடுபெற்று அடமான சொத்துக்களின் மீது வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், MODT உருவாக்கப்படவில்லை.

விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.baanknet.com/** கடன் வழங்கியவரான பாரத ஸ்டேட் வங்கியின் இணையதளமான **www.bank.sbi** என்ற இணைப்பில் காணலாம்.

தேதி: 26.10.2026
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர்,
பாரத ஸ்டேட் வங்கி, SARB - II , சென்னை

बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda India's International Bank 119
பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB)
சென்னை ரூரல் ரீஜியன், எண்.123, மெஸ்ஸனைன் தளம், துகார் டவர்ஸ், RL சாலை, எழும்பூர், சென்னை-600 008.
Phone: 044-28885428, E-mail: sarcmt@bankofbaroda.bank.in; Web: www.bankofbaroda.bank.in

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV – A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)
2002-ம்ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே"** மற்றும் **"என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண்.1: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் 1) Ms. அங்கயற்கண்ணி, பிளாட் எண். F1, 1வது தளம், மனை எண். 56A, பாலாஜி அவென்யூ, நந்திவரம் - 603 202. **மேலும் ஒரு முகவரி:** C-18, 2வது தளம், 3/148, சோலை அபார்ட்மெண்ட், மணப்பாக்கம், மவுண்ட் பூந்தமல்லி நெடுஞ்சாலை, நந்தம்பாக்கம், சென்னை-600089.

மொத்த நிலுவைத் தொகை: 25.10.2026 அன்றுள்ளபடி ரூ. 59,80,452.57/- மேலும் 25.10.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள். | சுவாதீனம் நிலை : மெய்நிலை

அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: அட்டவணை -A கூடுவாஞ்சேரி பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், நந்திவரம் கிராமத்தின் பழைய சர்வே எண்.378/1A. பழைய பட்டா எண்.5380, புதிய பட்டா எண்.9279 பட்டாவின் படி புதிய சர்வே எண்.378/7 இல் அடங்கிய அனுமதி எண்.C.S.A.R/D.T.P.M-87-494/L.P/341, இன் படி பாலாஜி அவென்யூ, என்ற மனைபிரிவின் மனை எண்.56 மொத்த விஸ்தீரணம் 4155 சதுர அடி சொத்து, அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி மற்றும் முழுவதுமாக விவரிக்கப்பட்ட அட்டவணைச்சொத்து. மனை எண்.56A இன் கட்டிட அனுமதிபடி : நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகர ஊராட்சி, நிர்வாக அதிகாரி, 19-05-2017 தேதியிட்ட Ka.vu.எண். 22/2017-2018, ka.vu.எண்.235/2017. மனை எண்.56B இன் கட்டிட அனுமதிபடி : நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகர ஊராட்சி, நிர்வாக அதிகாரி, 31-05-2017 தேதியிட்ட Ka.vu.எண்.13/2017-2018, ka.vu.எண்.231/2017. **எல்லைகள்: -** வடக்கில் : 23 அடி சாலை, தெற்கில் : மனை எண்கள்.57 & 58, கிழக்கில் : காலி நிலம், மேற்கில் : 40 அடி சாலை **நாற்பரப்புகள்:** வடக்கில் : 65 அடி, தெற்கில் : 73 1/2 அடி, கிழக்கில் : 60 அடி, மேற்கில் : 60 அடி, அனைத்தின் கூட்டுப்பரப்பளவு 4155 சதுர அடி. **அட்டவணை -B** தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட மனை எண்.56, மொத்த விஸ்தீரணம் 4155 சதுர அடி காலி நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 403.50 சதுர அடி. அதனுடன் பொது பரப்பு உட்பட, முதல் தளத்திலுள்ள 1004 சதுர அடி கட்டிடபரப்பு கொண்ட பிளாட் எண்.F-1, (ஒரு மூடிய கார்நிறுத்துமிடம், பொதுப்பரப்பு உட்பட, (E.B இணைப்பு எண்.09-583-003-1796). **Latitude 12.85309 Longitude 80.06308**

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 41,09,000/- | டேவணித் தொகை ₹ 4,10,900/- | ஏல உயர்வு தொகை ₹ 25,000/-

வ.எண்.2: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் 1) Ms. விஜயலட்சுமி கண்ணன், பிளாட் எண். F3, 1வது தளம், மனை எண்.56B, பாலாஜி அவென்யூ, நந்திவரம் - 603 202. **மேலும் ஒரு முகவரி:** எண்.23, மாணிக்கவாசகர் தெரு, விவேகானந்தபுரம், அருள் நகர், கூடுவாஞ்சேரி - 603 202.

மொத்த நிலுவைத் தொகை: 25.10.2026 அன்றுள்ளபடி ரூ. 61,56,326.56/- மேலும் 25.10.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள். | சுவாதீனம் நிலை : மெய்நிலை

அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: அட்டவணை -A கூடுவாஞ்சேரி பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், நந்திவரம் கிராமத்தின் பழைய சர்வே எண்.378/1A. பழைய பட்டா எண்.5380, புதிய பட்டா எண்.9279 பட்டாவின் படி புதிய சர்வே எண்.378/7 இல் அடங்கிய அனுமதி எண்.C.S.A.R/D.T.P.M-87-494/L.P/341, இன் படி பாலாஜி அவென்யூ, என்ற மனைபிரிவின் மனை எண்.56 மொத்த விஸ்தீரணம் 4155 சதுர அடி சொத்து, அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி மற்றும் முழுவதுமாக விவரிக்கப்பட்ட அட்டவணைச்சொத்து. மனை எண்.56A இன் கட்டிட அனுமதிபடி : நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகர ஊராட்சி, நிர்வாக அதிகாரி, 19-05-2017 தேதியிட்ட Ka.vu.எண். 22/2017-2018, ka.vu.எண்.235/2017. மனை எண்.56B இன் கட்டிட அனுமதிபடி : நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகர ஊராட்சி, நிர்வாக அதிகாரி, 31-05-2017 தேதியிட்ட Ka.vu.எண்.13/2017-2018, ka.vu.எண்.231/2017. **எல்லைகள்: -** வடக்கில் : 23 அடி சாலை, தெற்கில் : மனை எண்கள்.57 & 58, கிழக்கில் : காலி நிலம், மேற்கில் : 40 அடி சாலை **நாற்பரப்புகள்:** வடக்கில் : 65 அடி, தெற்கில் : 73 1/2 அடி, கிழக்கில் : 60 அடி, மேற்கில் : 60 அடி, அனைத்தின் கூட்டுப்பரப்பளவு 4155 சதுர அடி. **அட்டவணை -B (இதன் மூலம் தெரிவிக்கப்பட்ட சொத்து)** தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட மனை எண்.56, மொத்த விஸ்தீரணம் 4155 சதுர அடி காலி நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 437 சதுர அடி. அதனுடன் பொது பரப்பு உட்பட, முதல் தளத்திலுள்ள 1088 சதுர அடி கட்டிடபரப்பு கொண்ட பிளாட் எண்.F-3, (ஒரு மூடிய கார்நிறுத்துமிடம், பொதுப்பரப்பு உட்பட, E.B இணைப்பு எண்.09-583-003-1804) **Latitude 12.85309 Longitude 80.06308**

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 37,20,000/- | டேவணித் தொகை ₹ 3,72,000/- | ஏல உயர்வு தொகை ₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: **09.11.2026**, மதியம் 01 மணி முதல் மாலை 5 மணி வரை

EMD தொகை செலுத்த கடைசி தேதி : 13-11-2026 அன்று பிற்பகல் 1.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக

மின் ஏல தேதி & நேரம் (வ.எண்.1 முதல் 2 வரை): **13.11.2026** அன்று மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை | வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

விதிமுறைகள் & நிபந்தனைகளை அறிய இங்கு ஸ்கேன் செய்யவும்

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளமான **https://bankofbaroda.bank.in/e-auction** & ஆன்லைன் விற்பனைக்கான **https://baanknet.com.** இணையதள இணைப்பை பார்வையிடலாம், மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி: **044-28885428** எண்ணிலும் **கைபேசி எண். 9444882417** ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளவும்

தேதி : 26.10.2026 ; இடம்: சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

DINAMANI, Chennai Phone: 23457601 Fax: 044-23457619 RNI Reg. No. 3459/60 Printed and Published by **N. Gopalan** on behalf of Express Publications (Madurai) Private Limited., at Express Press, "Express Gardens", 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: **K.Vaidiyanathan** Chennai. Vol. 93, No. 298
COPYRIGHT: Express Publications (Madurai) Private Limited., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.